(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2010, மே 18, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2010, மே 07, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2010, மே 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0002/'10

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்மாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவினுள் கிரிந்த - யால தொடக்கம் றண்மினிதென்ன கிராமம் வரை 7000 ஏக்கர் நிலப்பரப்பில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக, 4500 தொடக்கம் 6000 இடைப்பட்ட விவசாயக் குடும்பங்கள் சேனைப் பயிர்ச்செய்கை மூலம் தமது வாழ்வாதாரத்தைப் பேணிவருகின்றார்களென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நிர்க்கதியான அந்த சேனை விவசாயிகளின் விவசாய நிலங்களை அவர்களுக்கு இழக்கச் செய்கின்ற திட்டமொன்று உள்ளதா,

(ii) அவ்வாறாயின் அந்த முயற்சியை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்த விவசாய நிலங்கள் எப்போதும் காட்டு யானைகளினால் பாதிப்புக்குள்ளாக்கப் படுகின்றனவா,

(ii) அவ்வாறாயின் இந்தப் பாதிப்புகளைத் தவிர்த்துக்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை,

(iii) மேற்படி நிலங்களுக்கான நீர், மின்சாரம், பாதைகள் ஆகிய அடிப்படை வசதிகளை வழங்கி விவசாயக் காணிகளாக அவற்றை அபிவிருத்தி செய்து, அவற்றின் உரிமையை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா?

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0003/'10

2.

கௌரவ சஜித் பிரேமதாச,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்மாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில், சுரிவிருகம கிராமச் சேவகர் பிரிவுக்குட்பட்ட, கோங்கெடிஆர கிராமத்தில் வசிக்கும் மக்களின் பெரும்பாண்மையானோரின் சீவனோபாயம், வருடத்தில் ஒரு முறை மட்டும் செய்யக்கூடிய சேனைப்பயிர்ச் செய்கையாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) கோங்கெடிஆர கிராமத்தில் அமைந்துள்ள இப்பயிர்ச் செய்கை நிலப்பரப்பினுள் 2009 செப்தெம்பர் மாதத்திலிருந்து சுற்றுப்புற

வனங்களிலுள்ள காட்டு யானைகளைக் கொண்டு வந்து மின்வேலி அமைத்து, அடைத்து வைத்துள்ளதன் மூலம், நிர்க்கதியான சுமார் 300 குடும்பங்கள், சுமார் 3000 ஏக்கர் பரப்பளவிலான தமது சேனைப் பயிர்ச்செய்கை காணிகளை இழந்துள்ளனரா என்பதையும்,

(ii) ஆமெனில், பயிர்ச்செய்கை நிலங்களை இழந்து நிர்க்கதிக்குள்ளான சேனைப் பயிர்ச் செய்கையாளர்களின் பயிர்ச் செய்கைக் காணிகளை அவர்களிடம் திருப்பி ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0004/10

3.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,-

(ஆ) (i) 1958 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க நெற்காணிச் சட்டத்தினால் குத்தகை விவசாயியின் குத்தகை உரிமை, காணி உரிமை, பின்னுரிமயாளர் உரிமை மற்றும் ஏனைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டன என்பதையும்,

(ii) இவ்வுரிமைகள் அனைத்தும் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் இரத்தாகியதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) தமது உரிமைகளை இழந்த இலங்கையின் சுமார் 4 இலட்சம் குத்தகை விவசாயக் குடும்பங்களின் குத்தகை உரிமையினை பாதுகாக்கும் முகமாக புதிய நெற்காணிச் சட்டமொன்றைச் சமர்ப்பிப்பதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ii) ஆமெனில், அது எக்காலப்பகுதியில் நடைபெறும்

என்பதை அவர் இ ச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0008/'10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாண முதலமைச்சரின் முழுப் பெயர் யாதென்பதையும்,

(ii) அவர் அப் பதவியின் கடமைகளை பொறுப்பேற்றது எப்போதென்பதையும் ,

(iii) முதலமைச்சர் பதவியை ஏற்றதன் பின்னர் அவரை சந்திப்பதற்கு வெளி நாட்டு அரச பிரதிநிதிகள் வருகை தந்திருப்பின் அந்த எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) அவ்வாறு வருகை தந்துள்ள வெளிநாட்டு பிரதிநிதிகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) அவர்கள் வருகை தந்துள்ள திகதிகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எவரது அழைப்பின் பேரில் வந் துள்ளார்களென்பதையும்,

(ii) மேற்படி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்துரையாடிய விடயங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0009/'10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வன வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக எந்த வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து எவ்வளவு கடன் தொகை பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது என்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தின் கீழ் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வரைபடத்திற்கு உள்ளடக்கப்படுவதற்காக இலக்கமிடப்பட்டுள்ள காடுகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(iii) வரைபடத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு எவ்வள வென்பதையும்,

(iv) அதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் ஆலோசகரர்களாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வெளிநாட்டவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட வர்கள் யாவரென்பதையும்,

(iii) இந்த வெளிநாட்டு விஜயங்களுக்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் காடுகளின் எல்லைகளை குறித்துக் காட்டுவதற்காகப் பெறப்பட்ட கொங்கிறீட் தூண்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக செலவுசெய்யப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்,

(ii) எஞ்சியுள்ள தூண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தேவையான எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிகுதியாகும் தூண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) இந்தக் கருத்திட்டத்தின் வரைபடத்திற்குள்ளாக்கல் மற்றும் பயன்படுத்தப் பட்ட தூண்களின் பொருட்டு நில அளவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0010/'10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) “லக்சதொச” நிறுவனத்தின் மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பணிப்பாளரின் பெயர் என்ன என்பதையும்,

(ii) அவருடைய பெயர் திரு. பிறியால் பெரேராவா என்பதையும்,

(iii) அவ்வாறாயின் அந்தப் பிறியால் பெரேராவின் தகமைகள், வயது என்பன என்ன என்பதையும்,

(iv) வரவுப் புத்தகமொன்றில் கைச்சாத்திடாமல் 2 வருடங்களுக்கான (2006 - 2008) லீவை பணமாக்குதலாக 80,000 ரூபாவை அவர் எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பதையும்,

(v) சம்பளமாக 115,000 ரூபா

போக்குவரத்திற்காக 43,500 ரூபா

பெற்றோலுக்காக 20,000 ரூபா

தொலைபேசிக்காக 2,500 ரூபா

முதலிய மாதாந்த ஊதியங்களை அவர் பெற்றுக்கொண்ட காலப்பகுதியையும் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இவ்வாறான நன்மைகளைப் பெறும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர் களின் பெயர்கள் என்ன?

(இ) இன்றேல், ஏன்?

0024 /'10

7.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் மொழிகளை கற்பிப்பதற்காக "கிராமிய கல்வி அபிவிருத்தி நிலையம்" எனும் நிறுவனமொன்று தென் மாகாணம் உட்பட பல மாகாணங்களில் செயற்பட்டு வருகின்றதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி பாடசாலைகள் யாவையென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்ற ஏனைய மாகாணங்களும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளும் யாவையென்பதையும்,

(iii) அதற்காக கல்வி அமைச்சிலிருந்து அல்லது மாகாண கல்வி அமைச்சுகளிலிருந்து மேற்படி நிறுவனத்துக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அது எப்போது, எவரால், எத்தகைய நிபந்தனைகளின் கீழ் என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப் படுவதாயின் ஒரு மாணவனிடமிருந்து அறவிடப்படும் தொகை எவ்வள வென்பதையும் ,

(ii) கல்வி அமைச்சு அல்லது வேறு அரச நிறுவனமொன்று அதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0025/'10

8.

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் மொழிகளை கற்பிப்பதற்காக "கிராமிய கல்வி அபிவிருத்தி நிலையம்" எனும் நிறுவனமொன்று தென் மாகாணம் உட்பட பல மாகாணங்களில்

நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டத்திற்கு ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும்போது பின்பற்றப்படும் முறைமை யாது என்பதையும்,

(ii) அவ்வாசிரியர்கள் ஆங்கிலம், தமிழ் மற்றும் ஜப்பான் போன்ற மொழிலகளை கற்பிப்பதற்கான தகுதியானவர்கள் என்பதற்கான சான்றிதழ் உள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி கருத்திட்டம் அரச நிறுவனமொன்றினால் மேற்பார்வை செய்யப்படு கின்றதா என்பதையும் ,

(vi) ஆமெனில், அது யாரால் என்பதையும் ,

(v) கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்று அல்லது பெறப்படாது இருக்கையில், சம்பந்தப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படா திருப்பின், மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0026/'10

9.

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2011 ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, ஆங்கில மொழி மூலம் அரசியல் விஞ்ஞானம் மற்றும் விவசாய பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கான பாடவிதானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அவை பாடசாலைகளில் கற்பித்தலுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதையும்,

(iii) இன்றேல், ஆங்கில மொழி மூலம் அந்தப் பாடங்களைக் கற்றும் மாணவர்கள் எந்தப் பாடவிதானத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிய 1621/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1627/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2009 திசெம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1632/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்) சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் அரசியலமைப்பின் 156 (3) உறுப்புரையின் வண்ணம் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு அமைய வேண்டுமென இப் பாராளுமன்றத்தினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) - ரூ. 65,000 /=

மேலும், இந்த மாதாந்த சம்பளத்துள் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாதலால், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்சுமன்) வீட்டு வாடகைப் படியும் அடங்கலாக ரூ. 65,0000/= மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக, 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிற படிகளைப் பெறுவதற்கு உரிமை இல்லையெனவும் இந்தப் பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*5.

காணி ,காணி அபிவிருத்தி அமைச்சர்,—உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2010, மே 19, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0005/'10

1.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் கமநல மத்திய நிலைய ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஆளுகைப் பிரதேசங்கள் யாவை என்பதையும்,

(iii) கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் காணப்படும் குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குத்தகை விவசாயிகளின் முகவரிகளை உள்ளடக்கிய பெயர்ப்பட்டியலொன்றை கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் பெற்றுத் தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0006/'10

2.

கௌரவ சஜித் பிரேமதாச,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(ஆ) (i) இலங்கையில் காணப்படும் கமநல மத்திய நிலைய ஆளுகைப் பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவை யாவை என்பதையும்,

(iii) கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் உள்ள குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) குத்தகை விவசாயிகளின் முகவரிகளை உள்ளடக்கிய பெயர்ப்பட்டியலொன்றை கமநல மத்திய நிலையங்கள் மட்டத்தில் பெற்றுத் தருவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0007/'10

3.

கௌரவ சஜித் பிரேமதாச,- சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,-

(அ) கிரிந்த ஓயா கழி முகத்திலிருந்து தொர ஓயா கழி முகம் வரையுள்ள 396 ஏக்கர் பூராவும் பரந்துள்ள 04.05 கிலோ மீற்றர் நீளமும், 01.05 கிலோ மீற்றர் அகலமும், 30 மீற்றர் உயரமும் கொண்ட மாகம மணல் மேடு பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த மணல் மேட்டின் காரணமாக 676 ஏக்கர் வயலும் 31 ஏக்கர் மேலதிக பயிர்ச்செய்கைக் காணியும் கடலலையிலிருந்து பாதுகாக்கப் படுகின்றதென்பதையும்,

(ii) இந்த மணல் மேடானது தென்னிலங்கைக்குரிய பாலை, வீர, பொன்னாவரசு, போன்ற தாவரங்களை உள்ளடக்கியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) இந்த மணல் மேடானது, அதிலுள்ள இல்மனைட், கிரனைட் ஆகிய கனியங்களை பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) சுமார் எட்டு அடிக்கு கீழுள்ள இந்த கனியங்களை பெற்றுக்கொள்ளும் பொது நில மட்டத்திலிருந்து மேலுள்ள மணல் மேற்பரப்பில் 60 வீதம் வரை அகற்றப்படுவதால் மாகம மற்றும் அதனை அண்மித்த கிராமங்களுக்கு பாதிப்புகள் ஏற்படுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) (i) அவ்வாறெனின் அந்த பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்னவென்பதையும்,

(ii) இந்த கருத்திட்டத்திற்காக பிரதேச மக்களின் விருப்பத்தைக் கேட்டறிவதை கருத்திட்டக் குழு மேற்கொண்டதா என்பதையும்,

(iii) மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் இந்தக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு செய்யப்பட்டது யாருடைய வழிகாட்டலின் கீழ் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0011/'10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மஹிந்த சிந்தனை கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் கீழ் தாபிக்கப் பட்டுள்ள "மகநெகும" கருத்திட்டத்தின் கீழ் 2008 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு வீதிக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iii) அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் இதுவரை செலவிடப் பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைகள், நிர்மாணிப்புகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் நிறுவனத்தின் கீழ் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த நிறுவனத்தின் கீழ் நாடு முழுவதிலும் திறக்கப்பட்டுள்ள அலுவல கங்களின் எண்ணிக்கை மற்றும் வாகன ஆவணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0012/'10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 1999 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையிலான, வடமேல் மாகாண சபையின் கணக்கு அறிக்கைகளை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஆ) மேற்படி கணக்கு அறிக்கைகளின் மூலம் வெளிவந்த மோசடிகள் மற்றும் ஊழல்களுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) மேற்படி மோசடிகள் மற்றும் ஊழல்களுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத் தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான விரிவான அறிக்கையொன்றை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா ?

(ஈ) (i) ஒழுக்காற்று விசாரணையின் முடிவுகளுக்கேற்ப குற்றம்சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்,

(ii) இன்றேல், குற்றம் சாட்டப்பட்ட உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ள அதிகாரிகளுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

0013 /'10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) எமது நாட்டின் பெருந்தொகையான கடற்றொழிலாளர்கள் இந்திய அரசின் தடுப்புக்காவலில் உள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2009 சனவரி மாதம் முதல் இற்றைவரை இந்திய அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) தற்போது தடுப்புக்காவலில் உள்ள கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தடுப்புக்காவலிலுள்ள கடற்றொழிலாளர்களை விடுவிப்பதற்கு மேற்கொள் ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, மே 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0014/'10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) வருடாந்த அடிப்படையில், இற்றைவரை கடந்த 10 ஆண்டுகளுக்கான -

(i) இராணுவத்திலுள்ள ஆளணியினரின் எண்ணிக்கையினையும்,

(ii) சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளிற்கென ஏற்பட்ட செலவினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) கடந்த 5 வருடங்களில் இராணுவத்திற்கேற்பட்ட மொத்த மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினத்தை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) ஒரு படையணியில் அல்லது குழுவில் உள்ள இராணுவ ஆளணியினரின் எண்ணிக்கையினையும்,

(ii) நிலைப்படுத்தப்பட்ட படையினரின் எண்ணிக்கையினை மாகாண அடிப்படையிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0015/'10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை நாடு முழுவதிலும் வருடாந்தம் இடம்பெற்றுள்ள வாகன விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவற்றுள் மரணம் சம்பவித்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை, மற்றும் சாதாரண வாகன விபத்துக்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) இந்த வாகன விபத்துக்களில் மிக வேகமாக ஓட்டியதனால், மற்றும் மதுபானம் அருந்தியதன் காரணமாக சம்பவித்துள்ள விபத்துக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) இந்த விபத்துக்களினால் உயிரிழந்த, மற்றும் காயமடைந்த அல்லது அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இவ்வாறு நாடு முழுவதிலும் ஏற்படும் வாகன விபத்துக்களை தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0016/'10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) இன்றுவரை கடந்த 10 ஆண்டுகளுக்கான வருட அடிப்படையில் -

(i) விமானப்படை ஆளணியினரின் எண்ணிக்கையினையும்,

(ii) சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட செலவினையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த ஐந்து ஆண்டுகளிற்கான விமானப்படைக்கான மொத்த மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகளை வருட அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒரு படையணியிலுள்ள அல்லது குழுவிலுள்ள விமானப்படை ஆளணியின் எண்ணிக்கையினையும்,

(ii) நிலைப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினை மாகாண அடிப்படையிலும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2010, யூன் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0017/'10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் நட்ட ஈட்டு உரிமை பெறுவதற்குள்ள பாதுகாப்புப்படையைச் சேர்ந்த ஆட்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்,

(ii) நட்ட ஈட்டு உரிமையாக வழங்கப்படும் தொகை எவ்வளவென்பதையும்,

(iii) இதுவரை எத்தனை பேருக்கு நட்டஈட்டு உரிமை வழங்கப்பட்டுள்ளதென்பதையும்,

(iv) நட்டஈட்டு உரிமை வழங்கப்படுதல் தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0019/'10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006, சனவரி 01 ஆம் திகதியிலிருந்து இற்றைவரை இலங்கையில் சீன அரசாங்கம் அல்லது சீனக் கம்பனிகள் மேற்கொண்டுவருகின்ற அனைத்து கருத்திட்டங்களினது பெயர்களையும்,

(ii) அவை கடன், கொடை அல்லது கூட்டு முயற்சியின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்,

(iii) மேலே (i) இற்கான நிதி மூலவளங்களையும் மற்றும் அதனுடன் தொடர் புடைய அனைத்து செலவுகளையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

0020/'10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) "மகநகும" கருத்திட்டத்தை தாபிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2004.01.21 ஆம் திகதிய அமைச்சரவை நிருபத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்,

(ii) இக்கருத்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள மகநகும வீதி நிர்மாணிப்பு இயந்திர உபகரணங்கள் நிறுவனத்தின் தற்போதைய தலைவரின் பெயர் மற்றும் இவரின் கல்வித்தகைமைகள் என்ன என்பதையும்,

(iii) மேற்படி தலைவருக்கு வழங்கப்படும் மாதாந்த சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையிலுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள் இவர்களுக்கென வழங்கப்பட்ட சம்பளங்கள் மற்றும் கொடுப் பனவுகள் யாவையென்பதையும்,

(ii) இங்குள்ள உத்தியோகத்தர்களது பெயர்கள், பதவிகள் மற்றும் இவர்கள் பெறும் சம்பளங்கள், வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் யாவை யென்பதையும்

2007, 2008, 2009 மற்றும் 2010 ஆண்டுகளின் பொருட்டு தனித்தனியாக அவர் இச்சபைக்கு சமரப்பிப்பாரா?

(இ) மேற்படி நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள வாகனங் களின் எண்ணிக்கை, அவை ஒவ்வொன்றும் சொந்தமான நிறுவனங்கள் அல்லது நபர்கள் அத்துடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2010 யூன் 11, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.1/'10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.2/'10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.3/'10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4/'10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும்

ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5/'10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6/'10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7/'10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.8/'10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற் படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9/'10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10/'10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற

தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பாடகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11/'10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப் படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12/'10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.13/'10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14/'10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15/'10

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16/'10

16.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட

வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.17/'10

17.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18/'10

18.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.19/'10

19.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.20/'10

20.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/'10

21.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/'10

22.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம்

ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23/'10

23.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/'10

24.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.25/'10

25.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26/'10

26.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப் பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற் காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27/'10

27.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைமேற்கொள்ளும் உள்நாட்டு கைத் தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.28/'10

28.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.29/'10

29.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.30/'10

30.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருது கின்றது.

பா.31/'10

31.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32/'10

32.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33/'10

33.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.34/'10

34.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல்,— புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில்களை மேம்படுத்தும் நோக்கிலும் இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்காகவும் மாவட்டத்தில் பொருத்தமான அமைவிடங்களில் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படவேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.35/'10

35.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்முனை நகரத்தில் சாத்தங்கேனி பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல்,— திகாமடுல்ல மாவட்டத்தின் இளைஞர்களுக்கு உயர்தரத்திலான வசதிகளை வழங்கும் பொருட்டும் பல்வேறு துறைசார்ந்த விளையாட்டுக்களிலும் அவர்களது திறமைகள், ஆற்றல் என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டும் சர்வதேச விளையாட்டு மைதானமொன்றாக அனைத்து துறைகளிலும் சாத்தங்கேனி பொது விளையாட்டு மைதானம் விருத்திசெய்யப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகிறது.

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்கள்

*1.

கௌரவ கல்வி அமைச்சர்,— தேசிய கல்விக் கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு, —

இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் கல்வி முறையானது அளவுசார் ரீதியாக விருத்தியடைந்திருந்த போதிலும் ஒப்பீட்டளவில் பண்புரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் வளர்ச்சியடையாமையினால் ஆசிரியர்களுக்கும் மாணவ, மாணவியருக்கும் பெற்றோர்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தோன்றியுள்ளதாலும்,

அவ்விடயத்துடன் தொடர்புடையதாக கல்வித்துறையில் பலவிதமான முறையற்ற செயல்களும் அநீதியும் மாத்திரமின்றி மோசடியும் ஊழல்களும் இடம் பெறுவதாக சமூக அபிப்பிராயமொன்று தோன்றியுள்ளமையாலும்,

ஒட்டுமொத்தமான கல்வித்திடத்திலும் பாரிய மாற்றங்களும் பல்வேறு மறுசீரமைப்புக்களும் இடம்பெற வேண்டுமென்ற மக்கள் கருத்து உருவாகியுள்ளதாலும்,

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கினை மையமாகக் கொண்ட அபிவிருத்தி உபாய முறையைக் கவனத்திற் கொண்டும்,

ஒட்டுமொத்தமான இலங்கை மாணவர் சந்ததியினரின் எதிர்காலத்தை உருவாக்க ஏற்புடையதாகக் கூடியவாறு பாலர் பாடசாலைப் பருவத்திலிருந்து பல்கலைக்கழகக் கல்விவரை மாணவர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்வதற்கு ஏதுவான வகையிலான தேசிய கல்வித் திட்டமொன்றை தயாரிப்பது காலந்தாழ்த்த இயலாததும், தேசிய முன்னுரிமை கிடைக்க வேண்டிய விடயமாக அமைவதாலும்,

(அ) முன்பள்ளிகள், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் ஏற்பட வேண்டிய அளவு ரீதியான, பண்பு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் உள்ளனவாவென்பதைக் கண்டறிவதற்காகவும் ,

(ஆ) தேசிய சமய, மற்றும் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் பொருட்டு கல்வித் திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(இ) பிரிவேனாக் கல்வியில் இடம்பெற வேண்டிய மாற்றங்கள் பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(ஈ) முதலாந் தரத்திற்குச் சிறுவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திட்டவட்டமான வழிமுறையொன்று உள்ளதாவெனக் கண்டறிவதற்காகவும்,

(உ) அனைத்துப் பரீட்சைகளினதும் பரீட்சித்தங்களினதம் பெறுபேறுகளை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்வருதல் மற்றும் உயர்கல்விக்கான தகைமைகளைப் பெறாத மாணவர்களுக்காக கல்வித் திட்டத்திலுள்ளே வழங்கக்கூடிய மாற்று வழிமுறைகளை உருவாக்க வேண்டுமா என்பதைக் கண்டறிவதற்காகவும்,

(ஊ) பல்கலைக்கழகத்தில் பிரவேசிப்பதற்கான தகைமைகளைப் பெற்ற போதிலும் இலங்கைப் பல்கலைக்கழமொன்றில் பிரவேசிக்காமல் வெளிநாடுகளில் கல்விபெறும் பொருட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு இந்நாட்டிலேயே கல்விக்கான வாய்ப்புக்களை வழங்கக்கூடிய வழிமுறைகள் உள்ளனவாவென்பதைக் கண்டறிவதற்காகவும்,

(எ) கல்வித்திட்டம் அமுலாக்கப்படுகின்ற நிலையில் பிரதேச, இன மற்றும் சமய ரீதியில் நிலவுகின்ற முரண்பாடுகளை நீக்குவதற்காக மேற்கொள்ள வெண்டிய வழிமுறைகள் யாவையெனக் கண்டறிவதற்காகவும்,

(ஏ) தேசிய கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகையில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் உருவாக வேண்டிய இடைத்தொடர்புகளின் தன்மை பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(ஐ) கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலையதிபர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களை உள்ளிட்ட ஒட்டுமொத்தமான கல்விமான்களின் பொறுப்பையும் கடமையையும் நிச்சயித்துக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவையென்பதைக் கண்டறிவதற்காகவும்,

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென்று இச்சபை, தீர்மானிக்கின்றது.

(2) (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அக்குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அதன் அறிக்கையை அதன் முதலாவது கூட்டத்தில் இருந்து மூன்று மாத (03) காலப்பகுதிக்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படுகின்ற அத்தகைய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்குச் சமப்பித்தல் வேண்டும்.

(3) அக்குழுவானது,

(அ) அதன் கூட்டநடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கு அதிகாரமுடைய தாயிருத்தல் வேண்டும்.

(ஆ) குழுவின் முன் தோற்றுமாறு எவரையும் கட்டளையிட்டழைப்பதற்கும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடவும் மேலுள்ள விடயத்தைப் பூரணமாக ஆராய்வதற்குத் தேவையானதெனக் கருதும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய்மொழியிலான அனைத்துச் சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளவும் பொறுப்பேற்கவும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

(இ) குழுவுக்குத் துணைபுரியவென உரிய துறைகளில் சிறப்புத் தகுதிகள் உடையோர் மற்றும் நிபுணர்கள் ஆகியோரின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லவும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது